89

பாப்பாவின் சங்கிலி

கிளப்பின் பந்தடி மேடையில் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருந்தது. வக்கீல் களெல்லாம் இங்குமங்கும் ஓடினார்கள். 'கிரோடன்ஸ்' செடி களிலும் தொட்டிகளிலும் மணலிலும் விழுந்து விழுந்து தேடினார்கள். கிளப்பின் காரியதரிசி போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினார். 'பிரிட்ஜ்' ஆடிக் கொண்டிருந்தவர்களும் கையிலிருந்து சீட்டை அப்படியே மேஜையின் மேல் போட்டார்கள். சற்று முன் சிரிப்பும் சத்தமும் நிறைந்திருந்த இடம் திடீரென்று இப்படி மாறுவதற்குக் காரணம் என்ன? சப் ஜட்ஜ் ஆத்மநாதையரவர்களுடைய மூன்று வயசுக் குழந்தை 'பாப்பா'வின் கழுத்திலிருந்த கடிகாரச் சங்கிலியைக் காணவில்லை!

அவர் கிளப்பின் அக்கிராஸனாதிபதி. அவரால்தான் அது புனருத்தாரண மானது. அதற்கு முன் ஜட்ஜுகள் பந்தடி மேடைக்கே போவதில்லை. ஆகையால் காக்கை குருவிகூட அந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை. ஆத்மநாதையருக்கு டென்னிஸ் என்றால் உயிர். அவ்வூருக்கு வந்த வுடன் மேடையைச் சீர்திருத்தம் செய்து இருந்தவர்களைச் சேர்த்துக் கொண்டு ஆட ஆரம்பித்தார். உடனே எல்லா வக்கீல்களும் டென்னிஸ் பித்துப் பிடித்தவர்களாகி விட்டார்கள்.

'எங்கேயும் போகமுடியாது; இங்கேதான் இருக்க வேண்டும்' என்று ஒரு வக்கீல் ஆரூடம் சொன்னார்.

'ஒரு வேளை வீட்டில் இருக்குமோ?' என்று சந்தேகித்தார் ஒரு யோசனைக்காரர்.

'இல்லை, இல்லை; இங்கே வந்த பிறகு நான் பார்த்தேனே!' என்று ஒருவர் ஸ்தாபித்தார்.

ஒரு வக்கீல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு சற்றுக் கொஞ்சிவிட்டு, 'சங்கிலி எங்கேயம்மா? யாரெடுத்தா பார்த்தையோ?' என்று சாதுரிய மாகக் கேட்டார். அவர் தம் தொழிலில் வழிகாட்டும் கேள்வி கேட்டுக் கேட்டுத் தலை நரைத்துப் போனவர்.

1943

வேறு எப்படியாவது கேட்டிருந்தால் குழந்தை சரியான பதில் சொல்லி யிருக்குமோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஒரு நிமிஷங் கூட யோசியாமல் குழந்தை தாசில்தாரைச் சுட்டிக்காட்டி, 'அந்த மாமா!' என்றது.

தாசில்தார் உள்பட எல்லோரும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்கள்.

'குழந்தைக்கு என்ன தெரியும்?' என்றார் ஒருவர்.

'என் கறுப்புத் தோலையும் சட்டையையும் பார்த்துச் சொல்லு கிறாள்' என்று தாசில்தார் ஹாஸ்யமாக ரஸத்தை மாற்ற முயன்றார்.

மேடைக்குப் பத்தடித் தூரத்தில் எதிரேயிருந்த கிளப் வாசலில் ஒரு நாட்டுப் புறத்துக் கட்சிக்காரன் உள்ளே வருவதற்கு யோசனை செய்து கொண்டு தயங்கி நின்றுகொண்டிருந்தான். தன் வக்கீல் உள்ளே இருக் கிறாரோ என்று அவனுக்குத் தெரிய வேண்டியிருந்தது. சற்று முன்புதான் பாப்பா அங்கே ஓடி வேடிக்கை பார்க்கப் போயிருந்தபோது ஜட்ஜின் குழந்தையென்று கேள்விப்பட்டுக் காலணாவுக்குப் 'பெப்பர்மிண்டு' வாங்கிக் கொடுத்தான்.

திடீரென்று பாப்பா அவனைச் சுட்டிக் காட்டி, 'அவன் பப்பரமுட்டு வாங்கிக் கொடுத்தான்' என்றது.

அவ்வளவுதான்! கிளப் முழுவதும் குபீலென்று அவன் பேரில் பாய்ந்தது.

'முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே!' என்றார் முகலக்ஷணங்களைக் கற்றறிந்த ஒருவர்.

'குழந்தை கெட்டிக்காரி!' என்று ஒரு வக்கீல் ஜட்ஜிடம் சொன்னார். இதனால் ஜட்ஜின் பிரியத்தைச் சம்பாதித்துவிடலாம் என்பது அவர் உத்தேசம்.

'பட்டப் பகலிலே என்ன தைரியம்!' என்று ஒரு பயந்த பேர்வழி ஆச்சரியப்பட்டார்.

'சங்கிலி எங்கே, எடு?' என்று அதட்டினார் நமது நரைத்த நண்பர்.

'லாக்கப்'பில் கொண்டுபோய் வைத்து அங்கே கேள்விகள் கேட்ட பிறகுதான் அந்த அசட்டு நாட்டுப் புறத்தானுக்கு விஷயம் புரிந்தது.!'

'கடவுளுக்குப் பொதுவாகச் சொல்றேன், ஏட்டையா, அதென்ன ஆச்சோ எனக்குத் தெரியாதுங்க. மிட்டாய் வாங்கிக் கொடுத்தது உண்டுங்க. சங்கிலி இருந்ததைக் கூட நான் பார்க்கலிங்க' என்று அவன் பல்லைக் காட்டிக் கெஞ்சினான்.

'அதெல்லாம் யாரு நம்புவா? நீயே மிட்டாய் கொடுத்ததாக ஒப்புக் கொள்றே. சங்கிலியைக் காணோம்.'

''அது காணாட்டி நான்தானா பொணெ? இதென்ன வம்பா?'

'ஓய்! உம் பேச்சு உபயோகமில்லை. சங்கிலியைக் கொடும்.'

'எம் மவ சொரத்திலே கிடக்கா; அவ ஆணையாச் சொல்றேன்.

எனக்குத் தெரியாதையா!'

'வெளியில் போகவேண்டுமா? ஜெயிலுக்குள் போகவேண்டுமா?'

'எங்கவூட்லே, ஆருமே செயுலுக்குப் போனதில்லே. நான்தானா மரியாதெ கெட்டுப் போவணும்?'

'வேண்டாம். சங்கிலியின் கிரயத்தைக் கொடுத்துவிடும்.'

'அதாஞ் சொல்லி தொலையுங்க ஐயா?'

'இருநூறு!'

'எரணூறா! ஆத்தாடி! என்ன அக்கிரவம் ஐயா?'

'அவனுக்கு அதற்குமேல் வெகு நேரம் பேசவேமுடியவில்லை. ஆனால் பணம் கொடுப்பதைத் தவிர வேறு வழி இருந்ததாகவும் தெரியவில்லை. 'உம்; சரி நாளெக்கிக் கோட்டு டாம்புக்குப் பொஞ்சாதி நவையே செட்டிக் கடையிலே வெச்சி ரூவா வாங்கியாந்தேன். இந்தாங்க வாக்கரிசி போட்டுக்கொங்க!' என்றான் கடைசியில்.

'பார்த்தேளா ஸார்! எனக்குத் தெரியும்! அதற்குள்ளே பணமாய் மாற்றிவிட்டான் பார்த்தேளா?'

'அவனை விட்டிருக்கக் கூடாது, ஸார்!'

'தொலைந்து போகிறான் ஸார். பணம் வந்து விட்டது!'

'நல்ல வேளையாய் நான் அங்கே போகாவிட்டால் அவன் தப்பிப் போயிருப்பான்!'

ஆனால் ஒரு கிளப் அங்கத்தினர் மட்டும் அன்றிரவு வெகு பாடுபட்டுப் போனார்; அவர்தாம் தாசில்தார்!

வீட்டுக்குப் போனவர் தபால் பையின் திறவு கோலை எடுப்பதற் காகச் சட்டைப்பையில் கைவிட்ட போது கடிகாரச் சங்கிலி கையில் அகப்பட்டது! அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. இன்னது செய்வ தென்று அவருக்குத் தெரியவில்லை. குழந்தை சொன்னதில் பிசகில்லை! 'எப்படி என் சட்டைப் பைக்குள் வந்தது? அவளே விளையாட்டாகக் கழற்றிப் போட்டிருக்க வேண்டும்! ஒருவரும் பார்க்கவில்லை என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

இரவு முழுவதும் அவர் மனத்தில் ஒரு பிரமாதமான போர். இவ்வளவு நடந்த பிறகு நகையைக் கொடுக்கப் போனால் வெகு கேவலமல்லவா! வெளியில் சொல்லாமல் எல்லோரும் மனத்துக்குள் இகழ்வார்கள். தம் வார்த்தைகளை ஒருவரும் நம்பமாட்டார்கள். மௌனமாய் மதிப்புரை கூறுவார்கள். தமக்கு மட்டுமல்ல, தம் ஸ்தானத்துக்கே அவமானம் வந்துவிட்டதே! சும்மா இருந்துவிட அவருக்கு மனம் ஸர்வதா இடம் தரவில்லை. அநியாயமாய் ஒரு மூன்றாவது மனுஷ்யன் இதற்காகக் குற்றவாளியாவதா? நஷ்டப் படுவதா? கூடவே கூடாது. கொடுத்தால் கேவலம்; கொடுக்காவிட்டால் அக்கிரமம்.

காலையில் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார்.

சாயந்தரம் ஐந்து மணிக்குக் கிளப்பில் எப்போதும்போல் கூப்பாடுகள், சிரிப்புகள், கரகோஷங்கள்!'

'நேற்றுக் காணமல் போன சங்கிலி–' என்று தாசில்தார் ஆரம்பித்தார். எல்லோரும் தம்மைத் திரும்பிப் பார்ப்பதை லக்ஷ்யம் செய்யாமல் தாசில்தார் மேலே பேசினார்:

'குழந்தை பாப்பா என்னைச் சுட்டிக் காட்டியது சரி. ராத்திரி வீட்டில் பார்த்தபோது என் சட்டைப் பையில் சங்கிலி இருந்தது. அது எப்படி அங்கு வந்ததோ தெரியவில்லை. நான்தான் குற்றவாளி. குழந்தை இருவரைச் சுட்டிக் காட்டியதில் என்னைக் குற்றவாளி யென்றும் அவனை மிட்டாய் கொடுத்தவனென்றும் சொன்னாள். நான் தாசில்தார் என்று என்னை நீங்கள் விட்டுவிட்டீர்கள். கேவலம் பட்டிக்காட்டான் என்று அவனைப் பிடித்துக்கொண்டீர்கள்!'

'இப்பொழுதென்ன செய்கிறது ஸார்?' என்று பெரிய வக்கீல் கேட்டார்.

'என்ன செய்கிறதா? வெகு யோக்கியமாக இருக்கிறதே! குற்றவாளி யொருவன்; தண்டனை அடைகிறவன் வேறு ஒருவனோ? ஜட்ஜ் அவர்களும், நானும் மாஜிஸ்டிரேட்டும் இந்தமாதிரி நியாயம் விதித்தால் சரி; உலகம் ஒப்பேறி விடும்! என் குற்றத்தை நான் உங்களிடம் ஒப்புக்கொண்டு பிரயோஜனம் இல்லை' என்று சொல்லிவிட்டுத் தம் சேவகனைப் பார்த்தார்.

அவன் வெளியே ஓடி அங்கே தயாராக அழைத்து வரப்பட்டிருந்த அந்த நாட்டுப்புறத்தானை அழைத்து வந்தான்.

'ஓய், அசட்டு வியவஹாரக்காரரே! இனிமேலாவது பெரிய மனுஷ்யர் களின் ஜோலிக்குப் போகக் கூடாதென்று உமக்குத் தெரிந்ததா? மிட்டாய் வாங்கிக் கொடுத்ததற்காக உமக்கு 'லாக்கப்' மரியாதை. என் பொறுப்பை உணராமல் நேற்றைச் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததற்காக எனக்கு ரூபாய் இருநூறு அபராதம். இந்தாரும், உம் பணம். இந்தாருங்கள் ஸார், உங்கள் குழந்தையின் சங்கிலி' என்று இருவர் கையிலும் கொடுத்தார்.

ஆத்மநாதையர் மறுவார்த்தை சொல்லுவதற்கு முன், தாசில்தார், சடக்கென்று எழுந்து நின்றார்.

'நண்பர்களே, போய் வருகிறேன். கிளப்பின் திக்குக்கு வந்தனம்' என்று சொல்லிவிட்டுச் சேவகனுடன் கிளப்பை விட்டுப் போய்விட்டார்.

•